## 39.தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்

தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் 2007ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 10 வயதிற்கு மேற்பட்ட அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளும் நல வாரியத்தில் உறுப்பினராகும் தகுதியுடையவர். மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தில் 6,32,587 மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் கீழ்க் குறிப்பிட்ட சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்ட உதவிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன:–

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | தனி நபர் விபத்து நிவாரணம் | | | |
| | **இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் பின்வருமாறு:** | | | |
| | (அ) | | இறப்பு | ரூ. 1,00,000/– |
| | (ஆ) | | கை அல்லது கால் இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ.1,00,000/– |
| | (இ) | | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ. 50,000/– |
| | (ஈ) | | நிரந்தரம், மொத்த ஊனம் (‘ஆ’ அல்லது ‘இ’ தவிர்த்து) | ரூ. 25,000/– |
| 2 | மாற்றுத் திறனாளி நபருக்கான இறுதிச் சடங்கிற்கு | | | ரூ. 2,000/– |
| 3 | மாற்றுத் திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கு | | | ரூ. 15,000/– |
| 4 | மாற்றுத் திறனாளியின் மகன் அல்லது மகள் கல்வி பயில உதவித் தொகை | | | |
| | (அ) | (i) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் 10 ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாக பயின்று, தேறிய மகன் அல்லது மகளுக்கு | ரூ. 1,000/– |
| | (ஆ) | (i) | விண்ணப்பதாரரின் +1 வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகளுக்கு | ரூ. 1,000/– |
| | (இ) | (i) | விண்ணப்பதாரரின் +2 அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகளுக்கு | ரூ. 1,500/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் +2 தேர்வு அல்லது அதற்கு சமமாகப் பயின்று தேறிய மகன் அல்லது மகளுக்கு | ரூ. 1,500/– |
| | (ஈ) | (i) | விண்ணப்பதாரரின் முறையான பட்டப் படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 1,500/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ. 1,750/– |
| | | (iii) | விண்ணப்பதாரரின் முறையான பட்ட மேற்படிப்பு பயின்று வரும் மகன் அல்லது மகளுக்கு | ரூ. 2,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | |
| | | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப்படித்தால் | ரூ. 3,000/– |
| | (உ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் சட்ட அல்லது பொறியியல் அல்லது மருத்துவம் கால்நடை அறிவியல் அல்லது தொடர்பான தொழிற்கல்விப் படிப்புகள் ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் | ரூ.2,000/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.4,000/– |
| | | (iii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்கல்வி, பட்ட மேற்படிப்பு படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 4,000/– |
| | | (iv) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப்படித்தால் | ரூ. 6,000/– |
| | (ஊ) | (i) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் தொழிற்பயிற்சி நிலையம் அல்லது பாலிடெக்னிக்குகளில் படிக்க ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் | ரூ. 1,000/– |
| | | (ii) | விண்ணப்பதாரரின் மகன் அல்லது மகள் விடுதியில் தங்கிப் படித்தால் | ரூ.1,200/– |
| 5 | திருமண உதவித் தொகை கணவன் அல்லது மனைவி இருவரும் விண்ணப்பித்தாலும் ஒருவருக்கு மட்டுமே இவ்வுதவி வழங்கப்படும் | | | ரூ.2,000/– |
| 6 | வாரியத்தின் பெண் உறுப்பினர்களுக்கு பிரசவம் அல்லது கருச்சிதைவு அல்லது கருக்கலைப்புக்கு நிதியுதவி | | | |
| | 1. மகப்பேறு | | | ரூ.6,000/– |
| | 2. கருச்சிதைவு | | | ரூ. 3,000/– |
| | 3. கருக்கலைப்பு | | | ரூ.3,000/– |
| 7 | மாற்றுத் திறனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க நிதியுதவி | | | ரூ. 500/– |

TAMIL NADU